# சிங்கப்பூரின் மின்னிலக்கத் தொழில்நிறுவன வரைவுத்திட்டம்

## மின்னிலக்கமயமாதலின் அடுத்தக் கட்டத்தைப் பலப்படுத்துதல்

## கவனம் செலுத்தும் பகுதி 1

**செயற்கை நுண்ணறிவின் துணைகொண்ட தீர்வுகள்மூலம் தொழில் நிறுவனங்கள் மேலும் அதிக அறிவாற்றலுடன் செயல்பட அதிகாரம் அளித்தல்**

- தொழில்துறை மின்னிலக்கத் திட்டங்களைப் புதுப்பித்துத் தொடங்கி, ஏற்புடைய செயற்கை நுண்ணறிவு, ஒருங்கிணைந்த தீர்வுகளை துறைசார்ந்த வகையில் முன்னிலைப்படுத்துதல்
- சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் மின்னிலக்கமயமாதல் திட்டத்தின்கீழ் சாத்தியமான வரையில் செயற்கை நுண்ணறிவின் துணைகொண்டு, முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட தீர்வுகளைச் செயல்படுத்துதல்
- அடுத்த ஈராண்டுகளில், செயற்கை நுண்ணறிவின் துணைகொண்ட தீர்வுகளிலிருந்து 15,000க்கும் மேற்பட்ட சிறிய, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அனுகூலமடைதல்
- மின்னிலக்க ரீதியாக வளர்ச்சியடைந்த 400க்கும் மேற்பட்ட சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் 'ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு x மின்னிலக்கத் தலைவர்களிடமிருந்து' பயன்பெறுதல்

## கவனம் செலுத்தும் பகுதி 2

**ஒருங்கிணைக்கப்பட்ட மின்னிலக்கத் தீர்வுகள்மூலம், தொழில்நிறுவனங்கள் மேலும் விரைவாக வளரத் துணைபுரிதல்**

- சாத்தியமான வரையில், அனைத்துத் தொழில்துறை மின்னிலக்கத் திட்டங்களும் ஒருங்கிணைந்த தீர்வுகளை உள்ளடக்கும் வகையில் புதுப்பிக்கப்படுதல்
- மேம்பட்ட மின்னிலக்கத் தீர்வுகள் திட்டத்தின் வழி, குறிப்பிட்ட ஒருங்கிணைந்த தீர்வுகளை வினையூக்கி துறை
- சாத்தியமான வரையில், சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவன மின்னிலக்கமயமாதல் திட்டத்தின்கீழ் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துத் தீர்வுகளும் மேகக் கணிமத் தொழில்நுட்பத்தைச் சார்ந்திருத்தல்




## கவனம் செலுத்தும் பகுதி 3

**மேம்பட்ட இணைய மீள்திறன் மூலம் தொழில்நிறுவனங்கள் மேலும் பாதுகாப்பாக இருக்க ஆயத்தப்படுத்துதல்**

- சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் மின்னிலக்கமயமாதல் திட்டத்தின்கீழ், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தீர்வுகளுக்கான தரவுப் பாதுகாப்பு, இணையப்பாதுகாப்புத் தரநிலைகளை நிறுவுதல்
- இணையப் பாதுகாப்புச் சான்றிதழ், இணைய நம்பிக்கைச் சான்றிதழ் ஆகியவற்றுக்கு இணையான துறைசார்ந்த இணையப்பாதுகாப்பு வழிகாட்டிமுறைகளை உருவாக்குதல்
- அனைத்துச் சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கும் இணையப்பாதுகாப்பு சுகாதாரப் பரிசோதனைக் கருவிகள் கிடைக்க வகைசெய்தல்
- இணையச் சுகாதாரத் திட்டங்களை உருவாக்க ஆண்டுதோறும் 400க்கும் மேற்பட்ட சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கு உதவும் சேவையாக தலைமைத் தகவல் பாதுகாப்பு அதிகாரி இடம்பெறுதல்

## கவனம் செலுத்தும் பகுதி 4

**மின்னிலக்க ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துதல்**

- அனைத்து ஊழியர்களுக்குமான மின்னிலக்கத் திறன் பயிற்சி வரைவுத்திட்டத்தை உள்ளடக்கும் வகையில், தொழில்துறை மின்னிலக்கத் திட்டங்களைப் புதுப்பித்தல் – குறிப்பாக, செயற்கை நுண்ணறிவுக் கருவிகளைப் பயன்படுத்துவதில்
- தகவல், தொடர்புத் துறைக்கான, வேலை உருமாற்ற வரைவுத் திட்டத்தின்கீழ் 200,000 தொழில்நுட்ப நிபுணர்களின் திறன்களை மேம்படுத்துதல்
- தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் - பலதுறைத் தொழிற்கல்லூரிகள் கூட்டணிக்கான தொழில்நுட்பத்துறைத் திறன்பயிற்சித் திட்டம்மூலம் திறன் அடிப்படையில் பணியமர்த்த ஊக்குவித்தல்
- நிறுவனங்களுடன் பணியமர்த்தி, பயிற்றுவிக்கும் திட்டங்கள்மூலம் 15,000 செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பர்களை உருவாக்குதல்
- செயற்கை நுண்ணறிவிலும் தேவையுடைய தொழில்நுட்பத் துறைகளிலும் உள்ள 18,000 தொழில்நுட்ப நிபுணர்களுக்குப் மறுதிறன் பயிற்சி அளித்தல்

**இந்த இலக்குகளை அடைவதற்கும், மின்னிலக்கமயமாதலின் அடுத்த கட்டத்தை வலுப்படுத்துவதற்கும் பங்காளிகளுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.**

**முழு வரைவுத் திட்டத்தைப் பதிவிறக்கம் செய்ய வருடுங்கள்**

https://go.gov.sg/deb

Ministry of Communications and Information

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

CSA SINGAPORE